# வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
# (துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு)

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள அத்துடன் உரிய தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டுள்ள பொருத்தமான பரீட்சார்த்தி ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவி – ஜேஎம் 1-2, தரம் II (01 வெற்றிடம்)

**வெளிவாரிப் பரீட்சார்த்திகள்**

**தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து முகாமைத்துவம் அல்லது வர்த்தகத் துறையில் பெற்றுக்கொண்ட இளமாணிப் பட்டமொன்று

**அல்லது**

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் (ICASL) இடைநிலை மட்டத் தகைமை

**அல்லது**

பட்டய முகாமைத்துக் கணக்காளர் நிறுவகத்தின் (CIMA) இடைநிலை மட்டத் தகைமை

**அல்லது**

சான்றுப்படுத்தப்பட்ட மற்றும் கூட்டாண்மைக் கணக்காளர் சங்கத்தின் (ACCA) இடைநிலை மட்டத் தகைமை

**அல்லது**

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தில் (SLIATE) பெற்றுக்கொண்ட உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா

**உள்வாரிப் பரீட்சார்த்திகள்**

**தகைமைகள்**

மேற்குறிப்பிட்ட வெளிவாரிப் பரீட்சார்த்திக்குத் தேவைப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல்

**அல்லது**

இப்பதவிக்குரிய விடய துறையில் இணை உத்தியோகத்தர் (எம்ஏ-3) வகுதியிலுள்ள ஒரு பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையைப் பூர்த்திசெய்திருத்தல்.

அல்லது

இப்பதவிக்குரிய விடய துறையில் “முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்பம் சாராத” (எம்ஏ 1-2) தரம் II இன் ஒரு பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையைப் பூர்த்திசெய்திருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்** ஜேஎம் 1-2 2025: ரூபா. (74,010– 10x 1,360 - 18x 2,040 – 124,330)

தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தியானவர் 01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை II இற்கு அமைவாக 2026.01.01 ஆம் திகதியிலுள்ளவாறு **ரூபா. 66,781/-** ஆகவுள்ள ஜேஎம் 1-2 தரம் II சம்பளத்தின் ஆரம்பப் படிநிலையில் அமர்த்தப்படுவார்.

இச்சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசாங்கத்திற்கு உடமையான தொழில்முயற்சிகளுக்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளுங்கூடச் செலுத்தப்படும்.

**வயதெல்லை** 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரிப் பரீட்சார்த்திகளுக்கு மேல் வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஆட்சேர்ப்பு முறை** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம்

**தகுதிகாண் காலப்பகுதி** வெளிவாரிப் பரீட்சார்த்திகளுக்கு 03 வருடங்கள் மற்றும் உள்வாரிப் பரீட்சார்த்திகளுக்கு 01 வருடம்

**இதர நன்மைகள்**

1. ஊழியர் சேமலாப நிதியம் (E.P.F) / ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (E.T.F.) நோக்கிய பங்களிப்பு
2. உட்புற மற்றும் வெளிப்புற சிகிச்சைகளுக்கான சத்திரசிகிச்சை மற்றும் வைத்தியசாலைசார் காப்பீடு
3. முழுமையான தனிநபர் விபத்துக் காப்புறுதிக் காப்பீடு
4. பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறைகளை காசாக்குதல்
5. ஏற்புடையதான வருடாந்த மிகையூதியம்
6. சலுகை நியதிகளின் பேரில் அலுவலர் குழாத்துக் கடன்களும் வீடமைப்புக் கடன்களும்
7. சலுகை நியதிகளின் பேரில் வாகனக் கடன்கள்

பொது அறிவுறுத்தல்கள்

- **சமாதான நீதவான் (JP)/ பிரசித்த நொத்தாரிசு/ சத்தியப் பிரமாண ஆணையாளர்** ஒருவரால் சான்றுப்படுத்தப்பட்ட கல்வி / தொழில்/ பிறப்புச் சான்றிதழ்களினதும் ஏனைய உரிய சான்றிதழ்களினதும் பிரதிகளுடன் ஒன்றிணைந்த சகல விண்ணப்பங்களும், உறவுமுறை சாராத இரு தொடர்பாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றுடன் சேர்த்து இவ்விளம்பரம் செய்யப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் (CSCL இன்) தவிசாளரிடம் சென்றடையும் வண்ணம் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பிக்கும் பதவியை உங்களின் விண்ணப்பத்திலும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையிலும் தயவுசெய்து குறிப்பிடுக.
- அரச துறை நிறுவனங்களின் ஊழியர்களின் விண்ணப்பங்களானவை உரிய நிறுவனத் தலைவர்களிற்கூடாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- காலம் பிந்திய மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.
- நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் குழுவொன்றின் மூலம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றில் விண்ணப்பதாரிகள் மதிப்பிடப்படுவர் என்பதை தயவுகூர்ந்து கவனத்திற் கொள்க.

மேற்போந்த தேவைப்பாடுகளுடன் இணக்கமற்றிருத்தலானது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு வழிகோலும். எவ்வழியிலும் செல்வாக்கைப் பிரயோகித்தலானது தகைமையிழப்பாக அமையும்.

---

தவிசாளர்
வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்,
இல: 27, MICH கட்டடம்
சேர் ராஷிக் பரீட் மாவத்தை (பிறிஸ்ரல் வீதி)
கொழும்பு 01.

மேலதிக தகவல்களுக்கு - (+94) 011 249 7800, விரிவு. 264/251/258 - மனிதவளத் திணைக்களம்

திகதி : 22.04.2026